# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)

(Affiliated to All India Federation of Power Diploma Engineers)

793, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.

44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014

Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |


நாள்: 08.10.2012

பெறுதல்

**திரு.ஆசிரியர் அவர்கள்,**

தினமணி,

சென்னை.

ஐயா,

பொருள்: உடன்குடி அனல் மின் நிலையத்தில் விரைவில் மின் உற்பத்தி - செய்தி வெளியீடு - திங்கள் கிழமை (08.10.2012 பக்கம் - 9) - விளக்கம் அளித்தல் - தொடர்பாக.

---

வணக்கம்.

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் பட்டயம், பகுதி நேர பட்டம் பெற்ற 7000 பொறியாளர்களை உறுப்பினர்களாக கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 45 ஆண்டுகளாக செயலாற்றிவரும் தொழிற்சங்கமாகும்.

தங்கள் தினமணி 08.10.2012 நாளிதழில் பக்கம் 9ல் உடன்குடி அனல்மின் நிலையத்தில் விரைவில் மின் உற்பத்தி என்ற தலைப்பில் வெளியாகியுள்ள செய்தியில் ......"பதவி உயர்வு காரணமாக தகுதி இல்லாதவர்கள் உதவிப் பொறியாளர்களாகி வருகின்றனர். அதனால்தான் மின்துறை சற்று பின்தங்கி உள்ளது" என்று மின்துறைப் பொறியாளர்கள் சங்கத் தலைவர் அப்பர்சாமி தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

இது தொடர்பாக எங்களது விளக்கத்தினை வெளியிட வேண்டுகிறேன்.

1. திரு.அப்பர்சாமி, தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் கழகத்தின் தலைவர் ஆவார். தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் தலைவர் திரு.A.அந்தோணி படோவராஜ் அவர்கள்.

2. பதவி உயர்வு காரணமாக தகுதி இல்லாதவர்கள் உதவிப் பொறியாளர்களாகி வருகின்றனர் என்ற பேச்சு உள்முகத்தேர்வு மூலமாக பொறியியல் பட்டம் பெற்ற உதவிப் பொறியாளர்களை அவமானப்படுத்தும் நோக்கில் பேசப்பட்டுள்ளது. இது உண்மைக்கு மாறானது. பட்டயம், பட்டம் இரண்டுமே பொறியியல் துறையில் இரு கண்களாகும். முழுநேரக்கல்வி பெற வசதியில்லாத குடும்ப சூழ்நிலையில் குடும்ப பொறுப்பை ஏற்றுக்கொண்டு பணிபுரிந்து கொண்டே பொறியியல் பட்டம் பகுதி நேரத்தில் (part time) படிப்பது சமுதாயத்தின் அடித்தட்டு மட்டும் நடுத்தர வர்க்கத்தின் வாழ்க்கையாகும்.

3. பொறியியல் பட்டத்தின் பாடதிட்டங்கள் (syllabus) முழுநேரக்கல்விக்கும், பகுதி நேர கல்விக்கும் ஒன்றே, இதில் எந்தவித மாற்றமும், ஏற்ற தாழ்வும் இல்லை.

4. வாரியத்தில் பல ஆண்டுகள் பணிபுரிந்து கொண்டே வாரிய தொழில்நுட்ப அனுபவத்துடன் முழுநேர மாணவர்கள் பயிலும் அதே பாடதிட்டத்தினை பயின்று தேர்ச்சி பெற்று வாரிய விதிகளின்படி தகுதியானவர்களாக மாறிய காரணத்தினாலே உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெறுகின்றனர்.

5. ஏட்டுக்கல்வி மட்டுமே ஒருவரின் திறமைக்கு சான்றாகாது. ஏட்டுக்கல்வியும் அனுபவமும் சேர்ந்துதான் திறமைசாலிகளை உருவாக்குகின்றது. அதன்படி பகுதிநேர பட்டம் பெற்றவர்கள் தகுதியில் கூடுதலானவர்களே தவிர குறைவானவர்கள் அல்ல.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பகுதி நேர பட்டம் பெற்று உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்கள் வாரியத்தின் மிக உயர்ந்த பதவியான வாரிய உறுப்பினர் (Board member) பதவிவரை வகித்து பல சாதனைகள் படைத்துள்ளனர்.

7. தற்போதும் வாரிய மட்டத்தில் பகுதிநேர பட்டம் பெற்றவர்கள் தலைமைப் பொறியாளர்களாகவும், மேற்பார்வை பொறியாளர்களாகவும், செயற்பொறியாளர்களாகவும் பதவி வகுக்கின்றனர். இவர்களில் பலர் தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் கழகத்தில் உறுப்பினராக உள்ளனர். திரு.அப்பர்சாமி அவர்களே இதற்கு தலைவராக உள்ளார். அவர்கள் தகுதியானவர்கள் இல்லை, சரியாக செயலாற்றவில்லை அதனால் மின்துறை பின்தங்கி உள்ளது என்ற கருத்தில் விழாவில் பலர் முன்னிலையில் திரு.அப்பர்சாமி அவர்கள் தெரிவித்திருக்கலாம்.

உண்மையில், முதிர்ந்த அனுபவமும், முழுநேர கல்வித்திட்டத்தின் பாடங்களிலும் முழுமையாக படித்து பட்டம் பெற்றவர்களே திறமையான, தகுதியான பதவி உயர்வு பெறும் உதவிப் பொறியாளர்கள். உண்மைக்கு மாறாக திரு.அப்பர்சாமி அவர்கள் வெளியிட்டுள்ள கருத்து ஆயிரக்கணக்கான உள்முகத்தேர்வு உதவிப் பொறியாளர்கள் (பணியாற்றுபவர்கள், பணி ஓய்வு பெற்றவர்கள்) மனங்களை புண்படுத்தியிருப்பதால் இவ்விளக்கத்தினை தங்கள் நாளிதழில் வெளியிட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

இப்படிக்கு,

( வி. அசோக்குமார் )

பொதுச் செயலாளர்.